**செ.வெ.எண்: 51 / ஜீன் / 2021** **நாள்:13.06.2021**

**<u>செய்திக் குறிப்பு</u>**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட 15 வார்டுகளில் 66,200 குடியிருப்புகளில் 2,46,600 மக்கள் வசித்து வருகின்றனர். மேற்குறிப்பிட்ட வீடுகளில் உருவாகும் 116 டன் குப்பைகள் 57 TATA ACE வண்டிகள் மற்றும் 180 தள்ளுவண்டிகள் வாயிலாக சேகரிக்கப்பட்டு 9 நுண்ணுயிர் கூடங்களில் உரமாக்கப்பட்டு வருகிறது. வார்டு பகுதிகளில் உள்ள குப்பைகள் மற்றும் மழைநீர் வடிகால்களை தூர்வாருவதற்கு மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, வார்டு எண்.53, 60 ஆகிய வார்டுகளில் 13.06.2021 இன்று மெகா கூட்டு சிறப்பு துப்புரவுப்பணி நடைபெற்று வருகிறது. வார்டு எண்.53க்குட்பட்ட கொடாப்பு, வ.உ.சி தெரு பகுதியில் நடைபெற்று வரும் தூய்மைப்பணி, மழைநீர்வடிகால் தூர்வாரும் பணிகளை மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள், நேரடி களஆய்வு செய்தபோது கொடாப்பு குளத்தை தூர்வாரி அதனைச் சுற்றிலும் நடைபாதை அமைக்குமாறும், வ.உ.சி தெருவில் சாலையினை சீரமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறும் அறிவுறுத்தினார். மேலும், கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட 15 வார்டுகளிலும் உள்ள 305 கி.மீ மழைநீர் வடிகால்களை, மழைக்காலம் தொடங்க இருப்பதால் போர்க்கால அடிப்படையில் தூர்வாரி சுத்தம் செய்யுமாறும் மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட மொத்தம் உள்ள 305 கி.மீ நீள மழைநீர் வடிகாலில் சுமார் 112கி.மீ அளவிற்கு மழைநீர் வடிகால் தூர்வாரி சுத்தம் செய்யப்பட்டு, சுத்தம் செய்யப்பட்ட மண்கழிவுகள் அகற்றப்பட்டதாகவும் மாநகராட்சி ஆணையர் தெரிவித்தார். மீதமுள்ள 193கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள் ஒருவார காலத்திற்குள் முடிக்குமாறு மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தினார்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள துறையூர், மணப்பாறை, துவாக்குடி நகராட்சிகள், மண்ணச்சநல்லூர், லால்குடி, ச.கண்ணனூர், முசிறி, தொட்டியம், புள்ளம்பாடி, கல்லக்குடி, காட்டுப்புத்தூர், மருங்காபுரி, பூவாலூர், தாத்தையங்கார்பேட்டை, சிறுகமணி, உப்பிலியபுரம், பாலகிருஷ்ணம்பட்டி, மேட்டுப்பாளையம், கூத்தைப்பார் மற்றும் பொன்னம்பட்டி பேரூராட்சிகளுக்குட்பட்ட ஆகிய அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் ஜே.சி.பி இயந்திரங்கள் மூலமோ அல்லது கூடுதல் பணியாளர்கள் மூலமோ மழைநீர் வடிகால்களை தூர்வாரி பின் மண் அகற்ற உடன் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி உள்ளார்.

மேலும், பொதுமக்கள் தங்கள் வீடுகளில் சேகரமாகும் குப்பையை வீடுகளுக்கு வந்து குப்பைகளை பெற்றுக் கொள்ளும் வாகனங்களில் குப்பைகளை தரம்பிரித்து வழங்கிடவும், பொது இடங்கள் மற்றும் நீர் நிலைகளில் குப்பைக் கழிவுகளை கொட்ட வேண்டாம் எனவும் மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**